உ

## இணுவை சிவகாமி அம்மை

# திருவிரட்டை மணிமாலை



யாத்தவர் : விழிசைச்சிவம்

வெளியீடு : இணுவை சிவகாமி
அருள்நெறி மன்றம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

இணுவை சிவகாமி அம்மை

# திருவிரட்டை மணிமாலை



யாத்தவர் : விழிசைச்சிவம்

வெளியீடு: இணுவை சிவகாமி அருள்நெறி மன்றம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| வெளியீடு | : | இணுவை சிவகாமி அருள்நெறி மன்றம். |
| நூலாசிரியர் | : | விழிசைச்சிவம் ( செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் ) |
| நூற்பதிப்பு | : | அருண் பிறிண்டேர்ஸ். |
| திகதி | : | 22 - 10 - 1993. |
| பிரதிகள் | : | முந்நூறு. |
| முதற்பதிப்பு | : | 1993 |
| அன்பளிப்பு | : | ரூபா 10/- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

தெல்லிப்பளையைச் சேர்ந்ததும் வித்தகபுரம் என்னும் கிராமசேவகர் பிரிவில் உள்ளதுமான விழி சிட்டிக் கிராமத்தில் பிறந்து வளர்ந்த அடியேன், இராணுவ நடவடிக்கைகள் காரணமாக 1993 ஆம் ஆண்டு மாசி மாதம் தொடக்கம் இணுவிலுக்கு வந்து வசிக்கிறேன். இங்கே வந்தபின் வெள்ளிக்கிழமை களில் இங்குள்ள ஆலயங்களுக்குத் தரிசனத்திற்காகச் செல்வது வழக்கம்.

இன்னும் ஈழத் தமிழர்கள் படும், இன்னல்களைப் பத் திரிகைகள் மூலமும், வேறுவழிகளிலும் அறிகின்றோம்.

''தீக்கா னகத்துறையுந், தெய்வங்காள் வீமன்றன்
கோக்கா தலியைக் குறிக்கொண்மின்''

என்று நளமகராசன் வேண்டியது போலத் தமிழர்கள் ஆகியநாம் படும் துன்பங்களை இங்கே வீற்றிருக்கின்ற தெய்வங்களிடம் முறைப்படுகின்ற தோரணையில் இணுவை சிவகாமியம்மை திருவிரட்டை மணிமாலை, என்ற பிரபந்தத்தை திருவருள்துணைக் கொண்டு பாடினேன். இதனை இணுவை சிவகாமி அருள் நெறி மன்றத்தாரிடம் ஒப்படைக்கின்றேன். அச் சிட்டு வெளியிடுவார்களாக.

செ. சிவசுப்பிரமணியம்,
(விழிசைச்சிவம்)
ஓய்வு பெற்ற அதிபர்.

இணுவில்
7 - 10 - 93

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

எல்லாம்வல்ல அன்னை சிவகாமியம்பிகையின் பேரருளினால் அன்பர் திரு. செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் தம்மனத்துதித்த இணுவை சிவகாமியம்மை திருவிரட்டை மணிமாலை என்னும் நூலினை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். அம்பிகையின் பேரருளினால் அவர்களுக்கு சகல நலன்களும் கிட்ட பிரார்த்திக்கின்றோம்.

இவ்வெளியீட்டிற்கு உதவியளித்த அனைவர்க்கும் நன்றிகூறி அமைகின்றோம்.

இங்ஙனம்,
என்றும் இறைபணியிலுள்ள
இணுவை சிவகாமி
அருள்நெறி மன்றத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணுவை சிவகாமி அம்மை
# திருவிரட்டை மணிமாலை

யாத்தவர்: **விழிசைச்சிவம்**

## காப்பு

பரராசசேகரப் பேர்பெறு நாயக பாரிலுளோர்
திரமாக வாழ்ந்திடச் செய்திட வல்லவ, தீயவைகள்
துரமாக ஓடிட வேண்டிச் சிவகாமி மீதிரட்டைச்
சரமாக வேமணி மாலையைப் பாடநீ தான்துணையே!

## நூல்

### வெண்பா

சிவகாமித் தாயே திருவருளளிக்குந் தேவி
அவமாக அல்லலுறு கின்றோம் — தவமேதும்
செய்ய அறியோம்யாம் தீவினைகள் தீர்வதெப்போ?
உய்ய வழியுரைப்பா யே! 1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டளைக்கலித்துறை

உரைப்பா ரெவரு மிலையே, உய்யவழி தானறியோம்
கரைப்பார் கரைக்கக் கல்லுங் கரைந்திடுமென்பர் முன்னோர்
திரைப்பா லமுத மெனவே திகழ்ந்திடு தேவியுனைத்
தரைப்பாற் றுணையாய்த் தனயர்யாம் சார்ந்தனம் தாங்குகவே!

2.

## வெண்பா

தாங்குகவே தாரணியிற் சற்சனங்கள் நம்மைநிதம்
பாங்குறவே சேர்ந்து பயன்பெறவும் — ஓங்குபுகழ்
பெற்றுமே வாழ்ந்திடவும் பெம்மான் திருவடிகள்
உற்றுமே ஒய்ந்திடவும் நீ.

3.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டளைக்கலித்துறை

ஒய்வது தானின்றி ஒடுகின்றோ மெமைக் காத்திடுக!
பாய்வது பூண்டிடு கங்கையே யாமெனப் பாரினிலே
நோவதைத் தந்திடு மென்னவர் செய்திடு
மின்னல்களைப்
போய்விடச் செய்திடு பூதலத்தோர் புகழ்
பூரணியே!

4.

## வெண்பா

பூரணியே! காரணியே!! பொற்புடனேர் நல்லறிவும்!
தாரணியிற் றாணருளும், தாயுனையே! பாரினிலே!
நற்றுணையே நீயெனவே நாடியில்வண் வந்தனமே!
பெற்றனமே உன்பாதம் பற்று!

5.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டளைக்கலித்துறை

பற்றறப் பாதை அறிகிலோம்; பாரினில் பஞ்செனவே
சுற்றுவோம்; தொல்லைகள், எல்லையில் லாமலே
சூழுகின்ற
சற்றுமே ஓய்விலைத் தாயே! தமியேம் படுதுயரை
உற்றுமே போக்கி உறுதுணை தான்செய் உமையவளே!

6.

## வெண்பா

உமையே, சிவகாமி! உன்னடியோம் எங்கள்,
தமையே, மறந்திடுதல் சால்போ — அமைவாகும்,
நல்லறங்கள் நாமுற்ற நன்மையெலாம் தானுடைய
வல்லவளே வாழ்வருள்வாய்!

7.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டளைக்கலித்துறை

வாழ்வருள் வாயென வந்து, நிதமுனைத்
தாள்பணிவோம்;
சூழ்வோம்; தொழுவோம்; சுடர்விளக் கேற்றுவோம்;
— தோத்திரிப்போம்.
கோள்பல குற்றமும், போக்கிடுவாயெனக்
கும்பிடுவோம்,
நாள்பல வாகினும், நம்பினோம் நாயகி நன்மை
செய்யே!
8.

## வெண்பா

நன்மைகளைச் செய்திடுவாய், நாயகியே! நாங்கள்
செயும்;
புன்மைகளை விலக்கி புத்தியருள் — இம்மையிலே,
நற்செயல்கள், செய்திடலும்; நாடிஇன்பம்
சேர்த்திடலும்.
கற்புடைய பூரணியே கா!
9.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டளைக்கலித்துறை

காத்திடவேண்டுமே கானகந் தன்னிற் கடியவரி,
பார்த்திட நின்ற பயங்கொள், பசுவென பார்த்தனில்
தீத்திறத் தாரால், தினமுந், தியங்கிக், கலங்கிடுவோம்.
தீர்திடு வாரிலைத் தீமைகள், தாமுங் குறைந்திலயே!
10.

## வெண்பா

தீமைகளும், தான்குறையா! தீர்வுகளும் வந்தனையா;
அமைதனின் வேகமென ஆகுதிங்கே! - பூமியிலே,
நல்லவழி சொல்வாரில்; நல்லவழி கேட்பாரில்;
நல்லவழி நாடுவரில்,
11.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கட்டளைக்கலித்துறை

நல்ல வழிதனை நாயகி நீயருள்வாயெனவே
அல்லும்பகலும் அணைந்துன் திருவடி போற்றிடுவோம்
ஒல்லும் வகையில் உனது பணிகள், உருற்றிடுவோம்!
தொல்லை வினைகளைத் தூரவே போக்கிடு தூயவளே!

12.

### வெண்பா

தூயவளே தாயினையாய் தொல்லைகளைப்
போக்கிடுவாய்!
ஆயகலையெல்லாம் அளித்திடுவாய் — போயகலத்
துன்பம் துடைத்திடுவாய்! தூயவழி காட்டிடுவாய்
இன்பம் தரவோடி வா!

13.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டளைக்கலித்துறை

ஓடிவருவாய் உறுதுயர் தீர்த்திட வேண்டுமம்மா!
நாடிவருவோம் நறுங்கொன்றைத் தாயற்கு நாயகியே!
கூடிப்பணிவோம் உன்கோயிலைப் பன்முறை
சுற்றிடுவோம்;
பாடிப் பரவும் பணியினைச் செய்வோம்
பயன்பெறவே !
14.

## வெண்பா

பயன்பெறவே யாம் வருவோம் பார்தனில் முன்செய்
நயங்களிலினைத் தீயசெயலிலே — நலிவுறுவோம்
சீருடைஞ் தாயே சிவகாமி யம்மேயுன்
பேரருளைத் தாராய் பெரிது.
15.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டளைக்கலித்துறை

பெரியது யாதெனப் பேர்நிலத் துள்ளோ ரறிவதற்காய்
அரிய முருகனை அறைகுவை பெற்றஔ வைக்கிழவி
பெரியது தொண்டர் பெருமை யெனவுறப் பேசினல்
அரிய தெதுவென ஆய்ந்திடுவோமிவ் வவனியிலே!

16.

## வெண்பா

அரியதுதான் மானுடராய் ஆருலகிற் றோன்றி
உரியமுறை தானம் தவம்செய் — பெருமைபெறல்
என்றே இயம்பினளே ஏடுடைய ஔவையெனும்
நன்றாம் பெருமையினல் நாடு

17.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கட்டளைக்கலித்துறை

நன்றாம் பெருமை நயந்தே பெறவிங்கு நாடிடுவீர்
டொன்றாப் புகழுடைப் பூரணியாஞ்சிவ காமிபதம்
குன்றா உளத்தொடு கூடும் தரும வழியதனில்
நின்றா விடரெல்லாம் நீங்கிடும் நல்ல
நெறியிதுவே! 18

## வெண்பா

நல்லநெறி நாடிடுவோம்! நன்மையெல்லாம்
பெற்றிடுவோம்!
அல்லநெறி செல்லா தகன்றிடுவோம் —
தொல்லையெலாம்
தூரவே போகும்; துயர்துடைப்பா ளெம்மம்மை
பார்வதியின் பாதம் துணை. 19



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டளைக்கலித்துறை

பாதந் துணையெனப் பற்றிநின் றாலிந்தப் பார்தனில்
ஏதும் விளைந்திடா தெய்தும் பெரும்பய னென்றுமே
காத லுடன்பல காலும் கசிந்து கசிந்து நின்றால்
சீத மலரடித் தாய்சிவ காமித் திருவுறுமே.

20.

இணுவைசிவகாமி அம்மை
திருவிரட்டை மணிமாலை

முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருண் பிறிண்டேர்ஸ் அன்ட் பப்பிளிஷேர்ஸ்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org